செ.வெ.எண். 53

நாள். 21.09.2017

# செய்திக் குறிப்பு

**மாவட்ட அளவில் சாப்டர் மேனிலைப்பள்ளியில் வைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் திருநெல்வேலியில் 06.10.2017 ஆம் நாள் நடைபெறுதல் தொடர்பாக.**

---

மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் திருநெல்வேலி சாப்டர் மேனிலைப் பள்ளியில் 06.10.2017 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் நடைபெறவுள்ளன.

மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே தமிழில் பேச்சாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின்கீழ் அரசு ஆணையின்படி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர் அவர்கள் உள்ளார். இக்குழுவில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி கோ. தனமணி, தமிழறிஞர் திரு வை. இராமசாமி, திருநெல்வேலி சாப்டர் மேனிலைப் நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயற்பட நியமிக்கப்பட்டுள்ளனர். திருநெல்வேலி மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் க. பசும்பொன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட அளவில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவருக்கு முதற் பரிசாக ரூ.10000/-மும், இரண்டாவது பரிசாக ரூ.7000/- மும் மூன்றாம் பரிசுத்தொகையாக ரூ.5000/-மும் வழங்கப்படும். பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். இப்போட்டிகள் 06.10.2017 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருநெல்வேலி சாப்டர் மேனிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளன. போட்டிகள் பற்றிய விவரங்கள் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் மூலம் சுற்றறிக்கை வாயிலாக மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் மாவட்ட அளவில் முதலாவதாக வெற்றி பெறும் மாணவர்கள் சென்னையில் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

இப்போட்டிகளில் மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 11, 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. மாவட்ட அளவிலான பரிசுத் தொகை :-

| போட்டியின் பெயர் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| கவிதைப்போட்டி | ரூ.10000/- | ரூ.7000/- | ரூ.5000/- |
| கட்டுரைப்போட்டி | ரூ.10000/- | ரூ.7000/- | ரூ.5000/- |
| பேச்சுப்போட்டி | ரூ.10000/- | ரூ.7000/- | ரூ.5000/- |

2. போட்டிகள் நடைபெறும் அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

3. போட்டிகள் மாவட்டத் தலைமையிடத்தில் நடத்தப்படும்.

4. 11, 12ஆம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். ஒரு பள்ளியிலிருந்து ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு மாணவர் வீதம் தெரிவு செய்து விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் நிறைவு செய்து தலைமை ஆசிரியரின் பரிந்துரை ஒப்பத்துடன் மாணவரிடம் விண்ணப்பத்தை அளித்துப் போட்டிக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாணவர்கள் போட்டிகள் நடைபெறும் நாளன்று காலை 9.00 மணிக்குள் வருகைப்பதிவு செய்திடல் வேண்டும்.

5. கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான தலைப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலிருந்து முத்திரையிட்ட உறையில் பெறப்படும்.

6. போட்டிகளுக்கான தலைப்புகள் பங்கேற்கும் மாணவர்களுக்கு முன்னதாகத் தெரிவிக்கப்படமாட்டாது. நடுவர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் போட்டிகள் தொடங்கப்பெறுவதற்கு முன்னர்ப் நடுவர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டுப் போட்டித் தலைப்புகள் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படும். அட்டைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் பேச்சுப் போட்டிக்கான தலைப்புகளில் ஒன்றை மாணவர் எடுத்து அந்தத் தலைப்பிலேயே பேசவேண்டும் பேசவேண்டும். பேசுவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னர்ப் பேசப்படும் தலைப்பினை மாணவர் தெரிந்து கொள்ளலாம்.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்